# திட்ட பணிக் குழுவின் ஆட்சேர்ப்பு

# நிலத்தடி தொலைக்காட்சி ஒளிபரப்பின் டிஜிட்டல் மயமாக்கல் (DTTB) திட்டம்

## சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சு

JICA நிறுவனத்தின் நிதியில் வழங்கப்படும் நிலத்தடி தொலைக்காட்சி ஒளிபரப்பின் டிஜிட்டல் மயமாக்கல் (DTTB) திட்டத்திற்கு கீழ் குறிப்பிடப்பட்ட பதவிகளுக்காக "ஒப்பந்த அடிப்படையில்" திட்டப் பணிக் குழுவை ஆட்சேர்ப்பதற்கு அரச/ தனியார் துறையில் தகுதி பெற்ற இலங்கை பிரசைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அனைத்து நியமனங்களும் முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் (MSD) 01/2019 ஆம் இலக்க சுற்றுநிருபம் மற்றும் அரச நியமனத்தின் நடைமுறைகளுக்கு அமைய மேற்கொள்ளப்படும். மேல் குறிப்பிடப்பட்ட MSD சுற்றுநிருபத்தின் 03 ஆவது அட்டவணையின் ஆறாவது பத்தியில் ஒவ்வொரு பதவிக்காகவும் சம்பளம் குறிப்பிடப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரர்கள் 54 வயதுக்கு குறைந்தவராக இருத்தல் வேண்டும். ஆங்கில மொழி தொடர்பில் தேர்ச்சி, அரச சட்ட திட்டங்கள் தொடர்பில் அறிவு மற்றும் கணினி அறிவு அவசியமான முன் தேவையாகும். இலங்கையில் வெளிநாட்டு நிதியைக் கொண்ட திட்டங்களில் பணியாற்றிய சேவை அனுபவம் மேலதிக தகைமையாகும்.

| இலக்கம் | சம்பள அளவு/ பிரிவு | பதவி | பதவி எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01 | PS 3 | உதவி திட்ட பணிப்பாளர் (பொறியியல்) | 01 |
| 02 | | உதவி திட்ட பணிப்பாளர் (கணக்கு) | 01 |
| 03 | | உதவி திட்ட பணிப்பாளர் (கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு) | 01 |
| 04 | PS 6 | தொழில்நுட்ப அதிகாரி | 02 |
| 05 | | திட்ட செயலாளர் | 01 |
| 06 | | திட்ட அதிகாரி | 02 |
| 07 | உதவி ஊழியர் | முகாமைத்துவ சேவை அதிகாரி | 02 |
| 08 | | ஓட்டுநர் | 02 |
| 09 | | அலுவலக உதவியாளர் | 01 |

ஒவ்வொரு பதவிக்காகவும் மேலதிக விபரங்களை www.media.gov.lk என்ற முகவரியில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும். மேலுள்ள தேவைகளை பூர்த்தி செய்கின்ற விண்ணப்பதாரர்கள் தமது சுயவிபரக்கோவையை விண்ணப்பப்படிவத்துடன் முன்னுரைக் கடிதம், தகைமை மற்றும் அனுபவத்தை உறுதி செய்கின்ற ஆவணங்களுடன் 2025 ஜூன் 11 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில் கீழ் தரப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்ப வேண்டும் என்பதோடு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடுதல் வேண்டும். மேல் குறிப்பிடப்பட்ட ஆவணங்களின் மென் பிரதிகளை pddttb@media.gov.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

**திட்டப் பணிப்பாளர்**
**நிலத்தடி தொலைக்காட்சி ஒளிபரப்பின் டிஜிட்டல் மயமாக்கல் (DTTB) திட்டம்,**
**163, கிருளப்பன மாவத்தை,**
**பொல்ஹேன்கொட,**
**கொழும்பு 05.**

தகைமையை பூர்த்தி செய்கின்ற விண்ணப்பதாரர்கள் மாத்திரம் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவர். எந்த ஒரு வகையிலும் அழுத்தம் கொடுப்பது தகைமை இழப்பாகும் என்பதோடு, அவ்வாறான விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**செயலாளர்**
**சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சு**
**2025.05.29**